## பாடம் - 9. அறிவு நிலா

**பாடம்: தமிழ்**

**வகுப்பு: 4**

### அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

1.‘ தினமும்’ என்ற சொல்லின் பொருள் ._________

**அ) நாள்தோறும்** ஆ) வேலைதோறும் இ) மாதந்தோறும் ஈ) வாரந்தோறும்

2.‘பனிச்சறுக்கு’ இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது __________

**அ) பனி + சறுக்கு** ஆ) பனிச் + சறுக்கு இ) பன + சறுக்கு ஈ) பன் + சறுக்கு

3. ‘வே ட்டை + நாய்’ - இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது __________

அ) வே ட்ட நாய் ஆ) வேட்நாய் **இ) வேட்டை நாய்** ஈ) வேட்டநாய்

### ஆ. வினாக்களுக்கு விடையளிக்க.

**1. ஓராண்டு நிலத்தில் உழைத்தவர் யார்?**

ஓராண்டு அண்ணனுடைய நிலத்தில் தம்பி உழைத்தார்.

**2. பெரியவர் சொன்ன புதிர்கள் எத்தனை ?**

பெரியவர் சொன்ன புதிர்கள் மூன்று. அவை,

- முதல் புதிர் - மனிதனுடைய வயிற்றை நிரப்புவது எது?
- இரண்டாவது புதிர் - மனிதனுக்கு மிக மகிழ்ச்சியைத் தருவது எது?
- மூன்றாவது புதிர் - அதிக விரைவாகச் செல்வது எது?

**3. புதிருக்குச் சரியான பதிலளித்தவர் யார்?**

புதிருக்குச் சரியான பதிலளித்தவர் தம்பி.


**4. பெரியவர் பசுவை யாருக்குக் கொடுத்தார்?**

பெரியவர் பசுவைத் தம்பிக்குக் கொடுத்தார்.

**5. கவின்நிலா பெரியவருக்குக் கொடுத்த பரிசு என்ன ?**

கவின்நிலா பெரியவருக்குக் கொடுத்த பரிசு சிட்டுக்குருவி.

### இ. எதிர்ச்சொல்லுடன் இணைப்போமா?



## இணைந்து செய்வோம்

### அ. விளையாடலாம் வாங்க! தூண்டில் மீன் விளையாட்டு!

மீன் வடிவத்தில் அட்டைகளை வெட்டிக் கொண்டு அட்டையில் பின்வரும் சொற்களை எழுதிக் கொள்ள வேண்டும். அட்டையில் குண்டூசியைக் குத்தி, வகுப்பறையின் நடுவில் வட்டமிட்டு அதில் அட்டைகளை பரப்பி வைக்க வேண்டும். ஒரு குச்சியின் நுனியில் நூலின் ஒரு முனையைக் கட்ட வேண்டும். மறு நுனியில் காந்தத்தை வைத்துக் கட்டிக் கொள்ள வேண்டும். வகுப்பறையில் பெரியதொரு வட்டமிட்டு வட்டத்தில் ஓர் அம்புக்குறி இடவேண்டும். வட்டத்தில் மாணவர்களை ஓடவிட வேண்டும். ஆசிரியர் உதவியுடன் மாணவர்கள் வட்டத்தில் நிற்க வேண்டும். அம்புக்குறி இட்ட இடத்தில் எந்த மாணவர் நிற்கிறாரோ அவர், தூண்டில் மூலம் ஓர் அட்டையை எடுத்து, அதில் உள்ள சொல்லுக்குப் பன்மைச் சொல் கூற வேண்டும்.

**எடுத்துக்காட்டு : முட்டை - முட்டைகள்**

புதிர் - புதிர்கள் வீடு - வீடுகள் கோழி - கோழிகள் நாய்- நாய்கள்

துணி - துணிகள் குச்சி - குச்சிகள் வண்டி - வண்டிகள் பரிசு - பரிசுகள்

முயல் - முயல்கள் குருவி - குருவிகள்

## மொழியோடு விளையாடு

**1. புகைவண்டி**

1.புகை 2.வண்டி 3.கை 4.வடி 5.வகை 6.கைவண்டி

**2. கதைப்பாட்டு**

1.கதை 2.பாட்டு 3.தை 4.பா 5.பாடு 6.தைபாட்டு

**3. பருத்திஆடைகள்**

1.பருத்தி 2.ஆடைகள் 3. ஆடை 4.கள் 5.பரு 6.ஆ

## சொல்லுக்குள் சொல் கண்டுபிடி!

கொடுக்கப்பட்ட சொல்லின் பொருள் கட்டத்திலுள்ள எழுத்துகளுள் ஒளிந்திருக்கிறது கண்டுபிடித்து எழுதுக.

**சதம் – ?**

| | | | |
|---|---|---|---|
| க | ண் | நூ | தை |
| எ | சி | ஃ | மி |
| அ | று | யா | பி |

= நூறு

**சித்திரம்**

| | | | |
|---|---|---|---|
| ஓ | ர | ய | யா |
| ரே | கே | ஏ | பி |
| ர் | ம் | ஃ | வ் |
| ப | ல | ஒ | வி |

= ஒவியம்

**நட்சத்திரம்**

| | | | |
|---|---|---|---|
| ரி | ற் | மீ | ரு |
| இ | வி | லை | பே |
| ற் | ண் | மீ | ன் |

= விண்மீன்

AKSHAYA ACADEMY MATRIC. H. SEC. SCHOOL KOSAVAPATTY KNOWLEDGE IS POWER